


**TNPSC GROUP 2/2a PRELIMS TEST BATCH AVAILABLE**

**FOR MORE DETAILS : WHATSAPP – 8438233722 : CLICK HERE**

# எட்டாம் வகுப்பு தமிழ் இயல் –5

1.கலித்தொகையை தொகுத்தவர் யார்?
A) பாரதம் பாடிய பெருந்தேவனார்
B) நல்லந்துவனார்
C) பெருங்கடுங்கோ
D) கபிலர்

2.ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல் – இதில் அலந்தவர் என்ற சொல்லின் எதிர்ச்சொல் என்ன?
A) செல்வந்தர்
B) வறியவர்
C) உறவினர்
D) அறிவற்றவர்

3.பொருத்துக
அ. கலை உணக் கிழந்த முழவுமருள் பெரும்பழம் – புறநானூறு
ஆ. மாக்கண் முரசம் – மதுரைக்காஞ்சி
இ. மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத்தாமம் நிரைதாழ்;ந்த பந்தர்கீழ் – நாச்சியார் திருமொழி
ஈ. சங்கொடு தாரை காளம் தழங்கொலி முழங்கு பேரி
வெங்குரல் பம்பை கண்டை வியன்துடி திமிலை தட்டி – பெரியபுராணம்
A) 1, 2, 3, 4
B) 3, 4, 2, 1
C) 4, 2, 3, 1
D) 4, 3, 2, 1

4.மறைபொருளைக் காத்தல்__________எனப்படும்.
A) சிறை
B) அறை
C) கறை
D) நிறை

5.போற்றுதல் என்பது புணர்ந்தாரை பிரியாமை – இவ்வரியில் உள்ள போற்றுதல் என்ற சொல்லின் பொருள் என்ன?
A) பாதுகாத்தல்
B) உதவிசெய்தல்
C) வணங்குதல்
D) பிரியாது இருத்தல்

6.நெய்தற்கலியை இயற்றியவர் யார்?
A) கபிலர்
B) நல்லந்துவனார்
C) பாரதம் பாடிய பெருந்தேவனார்
D) நன்முள்ளையார்

7.பதிகம் என்பது எத்தனை பாடல்கள் கொண்டது?
A) 5
B) 10
C) 4
D) 100

**TNPSC GROUP 2/2a PRELIMS TEST BATCH AVAILABLE**
**FOR MORE DETAILS : WHATSAPP – 8438233722 : CLICK HERE**

8.கூற்றுகளை ஆராய்க.
1. தே + ஆரம் – இறைவனுக்குச் சூட்டப்படும் மாலை
2. தே + வாரம் – இனிய ஓசை பொருந்திய பாடல்கள்
A) 1 மட்டும் சரி
B) 2 மட்டும் சரி
C) இரண்டும் சரி
D) இரண்டும் தவறு

9.பண்ணின்தமிழ் இசைபாடலின் பழவெய் – இத்தொடரில் பண் என்ற சொல்லின் பொருள் என்ன?
A) இசை
B) பாடல்
C) மேகம்
D) இசைக்கருவி

10.தமிழ்நாட்டில் எங்கு நடைபெற்ற அகழாய்வில் முதுமக்கள் தாழிகள் கிடைத்துள்ளன?
A) கரிக்கையூர்
B) செம்பியன் கண்டியூர்
C) ஆதிச்சநல்லூர்
D) கீழடி

11.மூங்கில்களில் எத்தனை பிரிவுகள் உண்டு?
A) 2
B) 3
C) 4
D) 5

12.பொருத்துக.
அ. அலந்தவர் – 1. உறவினர்
ஆ. செறாஅமை – 2. மறவாமை
இ. கிளை – 3. வெறுக்காமை
ஈ. மறாஅமை – 4. வறியவர்
A) 4, 2, 1, 3
B) 4, 1, 3, 2
C) 1, 3, 2, 4
D) 4, 3, 1, 2

13.மண்ணமை முழவு என்ற வரிகள் இடம்பெற்றுள்ள நூல் எது ?
A) சிலப்பதிகாரம்
B) மதுரைக்காஞ்சி
C) பொருநராற்றுப்படை
D) பெரும்பாணாற்றுப்படை

14.அரசரை அவரது________காப்பாற்றும்.
A) செங்கோல்
B) வெண்கொற்றக்குடை
C) குற்றமற்ற ஆட்சி
D) படை வலிமை

15.அன்பு எனப்படுவது தன்கிளை செறாஅமை – இவ்வரியில் கிளை என்ற சொல்லின் பொருள் என்ன?
A) மரக்கிளை
B) உறவினர்
C) பிள்ளைகள்
D) பிரிவுகள்

16.பொருத்துக.
அ. நோன்றல் – 1. பகைவர்
ஆ. போற்றார் – 2. பொறுத்தல்
இ. பேதையார் – 3. பொறுமை
ஈ. பொறை – 4. அறிவற்றவர்
A) 2, 1, 3, 4
B) 2, 1, 4, 3
C) 1, 2, 3, 4
D) 4, 3, 1, 2

17.நம்பியாரூரர் என்று அழைக்கப்படுபவர் யார்?
A) திருஞானசம்பந்தர்
B) திருநாவுக்கரசர்
C) சுந்தரர்
D) மாணிக்கவாசகர்

18.மண்பாண்டங்கள் செய்யப்பயன்படும் சக்கரம் எவ்வாறு அழைக்கப்படும்?
A) திருகை
B) திருவை
C) குருவை
D) இவற்றில் எதுவுமில்லை

19.கீழ்க்கண்டவற்றில் சரியானது எது?
A) பானை செய்தல்
B) பானை முடைதல்
C) பானை வனைதல்
D) பானை சுற்றுதல்

20.கூற்றுகளை ஆராய்க.
1. ஒரு சொல்லின் பொருளை அறியப் பயன்படுவது – கலைக்களஞ்சியம்
2. ஒரு பொருள் குறித்த அனைத்து விவரங்களையும் அறிந்துகொள்ளப் பயன்படுவது – அகராதி
A) 1 மட்டும் சரி
B) 2 மட்டும் சரி
C) இரண்டும் சரி
D) இரண்டும் தவறு

21.அறிவு எனப்படுவது பேதையார் சொல் நோன்றல் – இதில் பேதையார் என்ற சொல்லின் எதிர்ச்சொல் என்ன?
A) அறிவற்றவர் ``
B) அறிவுடையவர்
C) உறவினர்
D) பகைவர்

22.மூவர் தேவாரத்தை தொகுத்தவர் யார்?
A) நம்பியாண்டார் நம்பி
B) சேக்கிழார்
C) பதுமனார்
D) நாதமுனி

23.கலித்தொகை பற்றிய கூற்றுகளில் பொருந்தாதது எது?
1. இது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று
2. கலிப்பா என்னும் பாவகையால் பாடப்பட்டது.
3. 100 பாடல்களைக் கொண்டது

4. குறிஞ்சிகலி, முல்லைக்கலி, மருதக்கலி, நெய்தல்கலி, பாலைக்கலி என்ற ஐந்து பிரிவுகளைக் கொண்டது.

A) 1, 4 சரி
B) 2, 4 சரி
C) 1, 3, 4 சரி
D) 1, 2, 4 சரி

24.இசையை எத்தனை வகையாகப்பிரிப்பர்?

A) 2
B) 3
C) 4
D) 5

25.கலை உணக் கிழந்த முழவுமருள் பெரும்பழம் – என்ற வரிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

A) சிலப்பதிகாரம்
B) பொருநராற்றுப்படை
C) புறநானூறு
D) மதுரைக்காஞ்சி

26.திருக்குறள் படித்தாள் என்பது எவ்வகைத் தொகைநிலைத் தொடர்?

A) வேற்றுமைத்தொகை
B) வினைத்தொகை
C) பண்புத்தொகை
D) அன்மொழித்தொகை

27.உடுக்கை பற்றிய கூற்றுகளை ஆராய்க.

1. பெரிய உடுக்கையை தவண்டை என்பர்.
2. சிறிய உடுக்கையை குடுகுடுப்பை என்பர்.
3. தில்லையில் நடனமாடும் நடராசரின் கைகளுள் ஒன்றில் இதனைக் காணலாம்.
4. இறைவழிபாட்டின் போதும் குறிசொல்லும் போதும் இக்கருவி இசைக்கப்படுகிறது.

A) 1, 2, 3 சரி
B) 1, 2, 4 சரி
C) 3, 4 சரி
D) அனைத்தும் சரி

28.தண்டுடுக்கை தாளந்தக்கை சாரநடம் பயில்வார் – என்ற பாடல் வரியை எழுதியவர் யார்?

A) திருஞானசம்பந்தர்
B) திருநாவுக்கரசர்
C) மாணிக்கவாசகர்
D) சுந்தரர்

29.பெரிய புராணத்தை எழுதியவர் யார்?

A) நம்பியாண்டார் நம்பி
B) சுந்தரர்
C) அப்பர்
D) சேக்கிழார்

30.செறாஅமை என்ற சொல்லின் இலக்கணக்குறிப்பு என்ன?

A) செய்யுளிசை அளபெடை
B) சொல்லிசை அளபெடை
C) இன்னிசை அளபெடை
D) உயிரளபெடை

31.செறிவு எனப்படுவது__________.

A) தன்கிளை செறாஅமை

B) பேதையார் சொல்நோன்றல்

C) கூறியது மறாஅமை

D) மறை பிறர் அறியாமை

32.கூற்றுகளை ஆராய்க.

1. ஓர் எழுத்து தனித்து நின்றோ, பல எழுத்துக்கள் தொடர்ந்து நின்றோ பொருள் தருவது சொல் எனப்படும்

2. சொற்கள் பல தொடர்ந்து நின்று பொருள் தருவது தொடர் அல்லது சொற்றொடர் எனப்படும்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

33.எந்த வகை மூங்கில் கைவினைப் பொருள்கள் செய்வதற்கு ஏற்றது?

A) கல்மூங்கில்

B) மலைமூங்கில்

C) கூட்டுமூங்கில்

D) காட்டுமூங்கில்

34.அறிவு எனப்படுவது பேதையார் சொல் நோன்றல் – இதில் நோன்றல் என்ற சொல்லின் பொருள் என்ன?

A) வெறுத்தல்

B) பகைத்தல்

C) பொறுத்தல்

D) மறுத்தல்

35.திருத்தொண்டர் தொகை என்னும் நூலை எழுதியவர் யார் ?

A) மாணிக்க வாசகர்

B) திருநாவுக்கரசர்

C) சுந்தரர்

D) சேக்கிழார்

36.யாழ் பற்றிய கூற்றுகளை ஆராய்க.

1. வேட்டுவர் இறுகக் கட்டிய தங்கள் வில் நாணில் இருந்து எழும் ஓசையை உணர்ந்தனர். வில்லைப்போன்ற வளைவு உடையதும் நரம்புகளால் ஆனதும் விரலால் வருடக்கூடியதுமான கருவி ஒன்றை உருவாக்கினர்.

2. யாழின் வடிவமே மெல்லமெல்ல மாற்றமடைந்து பிற்காலத்தில் வீணையாக உருமாறியது

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

37.சேக்கிழார் பெரியபுராணத்தை எந்த நூலை அடிப்படையாக கொண்டு எழுதினார்?

A) திருத்தொண்டர் புராணம்

B) திருத்தொண்டர் தொகை

C) திருவிளையாடற் புராணம்

D) கந்தபுராணம்

38.பாணி என்று அழைக்கப்படும் இசைக்கருவி எது?

A) சேகண்டி
B) கொம்பு
C) சாலரா
D) திமிலை

39.பொருத்துக (பாய் பற்றியது)

அ. குழந்தைகள் படுக்க – 1. பட்டுப்பாய்
ஆ. உட்கார்ந்து உண்ண – 2. திண்ணைப்பாய்
இ. உட்கார, படுக்க – 3. பந்திப்பாய்
ஈ. திருமணம் – 4. தடுக்குப்பாய்

A) 1, 3, 2, 4
B) 1, 4, 2, 3
C) 3, 2, 4, 1
D) 4, 3, 2, 1

40.தொகைநிலைத் தொடர் எத்தனை வகைப்படும்?

A) 7
B) 6
C) 5
D) 9

41.இசைக்கருவிகளை இசைத்து பாடல் பாடுவோர் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?

A) பாணர்
B) விறலியர்
C) கூத்தர்
D) இவர்களில் யாருமில்லை

42.பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல் – இதில் பொறை என்ற சொல்லின் பொருள் என்ன?

A) பகை
B) பொறுமை
C) சிறுமை
D) எளிமை

43.இரு சொற்களுக்கிடையே வேற்றுமை உருபுகளோ, வினை, பண்பு முதலியவற்றின் உருபுகளோ தொக்கி(மறைந்து) வருமானால் அதனை____________என்பர்.

A) தொகாநிலைத் தொடர்
B) தொகைநிலைத் தொடர்
C) ஆகுபெயர்
D) பொருள்கோள்

44.சங்கு பற்றிய கூற்றுகளில் சரியானது எது?

1. இது ஓர் இயற்கைக் கருவி.
2. வலமாகச் சுழிந்து இருக்கும் சங்கை வலம்புரிச்சங்கு என்பர்.
3. சங்கின் ஒலியை சங்கநாதம் என்பர்
4. இலக்கியங்களில் இதனை படிலம் என்று குறிப்பிட்டுள்ளனர்

A) 1, 2, 3 சரி
B) 1, 2, 4 சரி
C) 2, 3 சரி
D) அனைத்தும் சரி

**TNPSC GROUP 2/2a PRELIMS TEST BATCH AVAILABLE**
**FOR MORE DETAILS : WHATSAPP – 8438233722 : CLICK HERE**

45.பொருந்தாத ஒன்றை தெரிவு செய்க.

A) சாலரா
B) பாண்டில்
C) ஜால்ரா
D) பணிலம்

46.பொருத்துக.

அ. பேரியாழ் – 1. 19 நரம்புகள்
ஆ. மகரயாழ் – 2. 14 நம்புகள்
இ. சகோடயாழ் – 3. 21 நரம்புகள்

A) 1, 2, 3
B) 3, 2, 1
C) 3, 1, 2
D) 2, 3, 1

47.சுந்தரரின் தேவாரம் எத்தனையாவது திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது?

A) 4
B) 7
C) 8
D) 10

48.தவறாக பொருந்தியுள்ளதை தேர்க.

A) இரண்டாம் வேற்றுமை – ஐ
B) மூன்றாம் வேற்றுமை – ஆல்
C) ஐந்தாம் வேற்றுமை – அது
D) ஏழாம் வேற்றுமை – கண்

49.பொருத்துக.

அ. தோல்கருவிகள் – 1. சாலரா, சேகண்டி
ஆ. நரம்புக்கருவிகள் – 2. முழவு, முரசு
இ. காற்றுக்கருவிகள் – 3. யாழ், வீணை
ஈ. கஞ்சக்கருவிகள் – 4. குழல், சங்கு

A) 1, 4, 3, 2
B) 4, 2, 3, 1
C) 3, 4, 2, 1
D) 2, 3, 4, 1

50.தொகைநிலைத் தொடரில் பொருந்தாதது எது?

A) வேற்றுமைத்தொகை
B) வினைத்தொகை
C) உம்மைத்தொகை
D)இருபெயரொட்டுப் பண்புத்தொகை

**TNPSC GROUP 2/2a PRELIMS TEST BATCH AVAILABLE**
**FOR MORE DETAILS : WHATSAPP – 8438233722 : CLICK HERE**